## 60க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்ற

# ‘சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா - 2025’

## நிறைவு விழாவில் நூல்களை வெளியிட்டு – முதல்வர் மு.க.ஸ்டாலின் விருதுகள் வழங்கினார்!

சென்னை, ஜன. 20 -

**சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா நிறைவு விழாவில், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் பதிப்பித்த 75 நூல்கள் மற்றும் மொழி பெயர்ப்பு மானியம் வாயிலாக மொழிபெயர்க்கப்பட்ட 30 நூல்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டு, பதிப்பாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், பதிப்புத் துறையில் புதுமை புரிந்தவர் களுக்கு விருதுகளை வழங்கி சிறப்பித்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.1.2025) சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா 2025 நிறைவு விழாவில், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் பதிப்பித்த 75 நூல்கள் மற்றும் 2023 மற்றும் 2024ஆம் ஆண்டுகளுக்கான மொழி பெயர்ப்பு மானியம் வாயிலாக மொழிபெயர்க்கப்பட்ட 30 நூல்களை வெளியிட்டார்.

மேலும், சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா தூதர் விருது, உலகளாவிய தொலைநோக்கு டிஜிட்டல் புத்தக கண்காட்சி சிறப்பு விருது, பண்டைய தமிழ் இலக்கிய மேம்பாட்டு விருது, நவீன தமிழ் இலக்கிய மேம்பாட்டு விருது, கூட்டு வெளியீட்டு கூட்டாண்மை விருது, பன்னாட்டு மானியக் குழுவின் சிறப்பு விருது, புத்தக ஊக்குவிப்பு விருது, உலகளாவிய இலக்கிய ஆதரவிற்கானவிருதுஆகியவிருதுகளைவிருதாளர்களுக்கு வழங்கி சிறப்பித்தார்.

### ஏற்றமிகு வளர்ச்சி!

உலகைத் தமிழுக்கும்; தமிழை உலகுக்கும் (Bringing the World to Tamil; Taking Tamil to the World) என்ற உயரிய நோக்கத்தோடு கொண்டாடப்படும் சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவில், 2023ஆம் ஆண்டு 24 நாடுகள் பங்குபெற்று 365 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், 2024ஆம் ஆண்டு 40 நாடுகள் பங்குபெற்று 752 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்பட்டன.

ஆண்டுதோறும் ஏற்றமிகு வளர்ச்சியினைக் கண்டு வரும் சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா இந்த ஆண்டு, சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் 16.1.2025 முதல் 18.1.2025 வரை மூன்று நாட்கள் நடைபெற்றது.

இந்த ஆண்டு 60க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து பதிப்புலக ஆளுமைகள் இப்புத்தகத் திருவிழாவில் கலந்து கொண்டுள்ளனர். ஆஸ்திரேலியா, பெனின், புரூனே, பல்கேரியா, சிலி, சைப்ரஸ், எஸ்தோனியா, எத்தியோப்பியா, கானா, ஐவரி கோஸ்ட், ஜப்பான், கஜகஸ்தான், கிர்கிஸ்தான், லக்ஸம்பர்க், மடகாஸ்கர், மொரிசியஸ், மெக்சிகோ, மங்கோலியா, மொராக்கோ, மொசாம்பிக், நேபாளம், நைஜீரியா, நார்வே, ROC (தைவான்), ருமேனியா, சவுதி அரேபியா, தென் ஆப்பிரிக்கா, தென் கொரியா, இலங்கை, டோகோ, உக்ரைன், அமெரிக்க ஐக்கிய நாடுகள் (USA), உஸ்பெகிஸ்தான், ஜிம்பாப்வே ஆகிய 34 நாடுகள் முதல் முறையாக பங்கேற்றுள்ளன. சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற இப்புத்தகத் திருவிழாவில், 78 அரங்கங்கள், குழந்தைகளுக்காக 3 சிறப்பு அரங்கங்கள் என 60க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்றுள்ளன.

### 166 தமிழ் நூல்கள் 32 மொழிகளில் மொழிபெயர்ப்பு!

உலகெங்கும் நம் இலக்கியங்களை எடுத்துச் சென்று, தமிழ் மொழியின் சிறப்பினை பறைசாற்றும் வகையில், தமிழ்நாடு மொழிபெயர்ப்பு மானியமாக ஆண்டுதோறும் 3 கோடி ரூபாய் தமிழ்நாடு அரசால் வழங்கப்படுகிறது. இதன்மூலம், கடந்த இரண்டாண்டுகளில், 166 தமிழ் நூல்கள் 32 மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்படுவதற்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு புகழ்பெற்ற பன்னாட்டுப் பதிப்பகங்களான ஆக்ஸ்போர்டு யூனிவர்சிட்டி பிரஸ், பென்குயின் ரேண்டம் ஹவுஸ், ஹார்ப்பர் ஹாலின்ஸ், ஹெஷட் (Hachette), ரௌட்லட்ஜ் (Routledge), ப்ளூம்ஸ்பெர்ரி (Bloomsbury) போன்றவற்றுடன் இணைந்து பல்வேறு கூட்டு வெளியீடுகளை (Copublications) குறிப்பாக தமிழ் இலக்கியங்களை தமிழ்நாட்டு வரலாற்றை தமிழர் பண்பாட்டை ஆங்கில மொழி மொழிபெயர்ப்புகள் வாயிலாக உலகெங்கும் கொண்டு சேர்க்கும் பணியினை சிறப்பாகச் செய்து வருகிறது.

### 30 நூல்களை முதல்வர் வெளியிட்டார்!

அதன் தொடர்ச்சியாக, இன்றையதினம் சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா நிறைவு விழாவில், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் பதிப்பித்த 75 நூல்கள் மற்றும் 2023 மற்றும் 2024ஆம் ஆண்டுகளுக்கான மொழிபெயர்ப்பு மானியம் வாயிலாக மொழிபெயர்க்கப்பட்ட 30 நூல்களை முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

இந்த ஆண்டு நடைபெற்ற சென்னை பன்னாட்டு புத்தகக் கண்காட்சியில் 1125 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. இதில் தமிழ்மொழியிலிருந்து அயலக மொழிகளுக்கு 1005 ஒப்பந்தங்களும் அயலக மொழிகளிலிருந்து தமிழ் மொழிக்கு 120 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன. குறிப்பாக அரபிக் மொழிக்கு 33 ஒப்பந்தங்களும், பிரெஞ்ச் மொழிக்கு 32 ஒப்பந்தங்களும், மலாய் மொழிக்கு 28 ஒப்பந்தங்களும் கையெழுத்தாகியுள்ளன.

மேலும், சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா நிறைவு விழாவில், முதலமைச்சர் அவர்கள், சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா தூதர் விருதினை PWB Global Ambassador, ASEAN Publishing Association, African Publishers Network (APNET), Francophone Ambassador ஆகிய பதிப்பகம் மற்றும் அமைப்பிற்கும், உலகளாவிய தொலைநோக்கு டிஜிட்டல் புத்தக கண்காட்சி சிறப்பு விருதினை ரியாத் புத்தக கண்காட்சிக்கும், பண்டைய தமிழ் இலக்கிய மேம்பாட்டு விருதினை திரு. தாமஸ் ஹிடோஷி புருக்ஷிமா (Thomas Hitoshi Pruiksma) மற்றும் பேராசிரியர் டாக்டர் அருள்சிவன் ராஜு ஆகியோருக்கும்,

நவீன தமிழ் இலக்கிய மேம்பாட்டு விருதினை கிறிஸ்டியன் வியிஸ் (Christian Weiss) மற்றும் திரு.கே.எஸ். வெங்கடாசலம் ஆகியோருக்கும், கூட்டு வெளியீட்டு கூட்டாண்மை விருதினை ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக பதிப்பகத்திற்கும், பன்னாட்டு மானியக் குழுவின் சிறப்பு விருதினை துருக்கி நாட்டின் TEDAவிற்கும், புத்தக ஊக்குவிப்பு விருதினை மங்கோலியா மேஜிக் பாக்ஸ் மற்றும் இத்தாலி நாட்டின் கியூண்டி ஒடியன் புத்தக விற்பனை நிலையத்திற்கும் (Guinti Odeon Bookshop), உலகளாவிய இலக்கிய ஆதரவிற்கான விருதினை பொலானா குழந்தைகள் புத்தகக் கண்காட்சிக்கும் (Bologna Children’s Book Fair) வழங்கி சிறப்பித்தார்.

இந்த விழாவில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, ஒன்றிய முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சசி தரூர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, சட்டமன்ற உறுப்பினர்கள், அமெரிக்க எழுத்தாளர் தாமஸ் ஹிடோஸி ப்ருக்ஸ்மா, இத்தாலி பொலோனியா புக் ப்ளஸ் இயக்குநர் திருமதி ஜாக்ஸ் தாமஸ், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திரு.திண்டுக்கல் ஐ.லியோனி, பள்ளிக் கல்வித் துறை செயலாளர் திருமதி எஸ்.மதுமதி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் மற்றும் பொது நூலக இயக்குநர் முனைவர் பொ.சங்கர், இந்தியா மற்றும் பன்னாட்டு பதிப்பாளர்கள் மற்றும் எழுத்தாளர்கள், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.1.2025) சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா – 2025 நிறைவு விழாவில், 2023 மற்றும் 2024–ஆம் ஆண்டுகளுக்கான மொழி பெயர்ப்பு மானியம் வாயிலாக மொழிபெயர்க்கப்பட்ட 30 நூல்களை வெளியிட, ஒன்றிய முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சசி தரூர் அவர்கள் பெற்றுக் கொண்டார். இந்த விழாவில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, அமெரிக்க எழுத்தாளர் தாமஸ் ஹிடோஸி ப்ருக்ஸ்மா, இத்தாலி பொலோனியா புக் ப்ளஸ் இயக்குநர் திருமதி ஜாக்ஸ் தாமஸ், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, பள்ளிக் கல்வித் துறை செயலாளர் திருமதி எஸ்.மதுமதி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் மற்றும் பொது நூலக இயக்குநர் முனைவர் பொ.சங்கர், இந்தியா மற்றும் பன்னாட்டு பதிப்பாளர்கள் மற்றும் எழுத்தாளர்கள், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---



திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் எதிரே நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழாவில் மாவட்ட கழக செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. பங்கேற்று சமத்துவ பொங்கலிட்டார். நகர கழக செயலாளர் வாரை.எஸ். பிரகாஷ் பொதுக்குழு உறுப்பினர் டி. செந்தில், ஒன்றிய செயலாளர் சேகர் கலியபெருமாள், புலிவலம் தேவா, மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் தாஜுதீன், துணை அமைப்பாளர் செபேஷ் ரோலி , மாவட்ட அமைப்பாளர்கள் பணங்குடி ஏ. எஸ். குமார், ராஜ் என்கிற கருணாநிதி மற்றும் மாநில மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் அனைத்து மதங்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர் .



பொங்கல் திருவிழாவை முன்னிட்டு பொள்ளாச்சி சட்டமன்ற தொகுதி பணப்பட்டியில் நடைபெற்ற பெண்களுக்கான கோலப்போட்டியினை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் கிணத்துக்கடவு வடக்கு ஒன்றிய செயலாளர் கிரி கதிர்வேல் மாநில அமைப்புசாரா ஓட்டுனர் அணி துணைச் செயலாளர் பி. கே தினகரன் தலைமை பொதுக்குழு உறுப்பினர் சாந்தாமணி வேலுச்சாமி ஒன்றிய குழு உறுப்பினர் மகேந்திரன் மாவட்ட சிறுபான்மை நல குழு அமைப்பாளர் அல்தாப் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் வெட்டு மெட்டுவாவி சுரேஷ் பணப்பட்டி கிளை பொறுப்பாளர் திருமூர்த்தி மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் கார்த்தி செந்தில் நடராஜன் பெரியப்பன் வெங்கடேஷ் மற்றும் கொங்கு நாடு மக்கள் கட்சி ஒன்றிய துணைச் செயலாளர் சிவகுமார் மற்றும் பொதுமக்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

---

எம்.அப்துல்மாலிக் வரவேற்புரை -

## செம்பனார்கோயில் - தரங்கம்பாடியில் பாக முகவர்கள் கூட்டம்!

நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., மன்னை த.சோழராஜன் சிறப்புரை!

மயிலாடுதுறை, ஜன. 20 -

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் தெற்கு ஒன்றியம் மற்றும் தரங்கம்பாடி பேரூர் தி.மு.க. பாக முகவர்கள் (பி.எல்.ஏ.2) மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (பி.எல்.சி.) கலந்தாய்வு கூட்டம் சங்கரம்பந்தல் இலுப்பூரில ரமாட்டி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு செம்பனார்கோயில் தெற்கு ஒன்றியச் செயலாளர் எம்.அப்துல்மாலிக் வரவேற்றார்.

சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் எம்.எம்.சித்திக், மாவட்ட துணைச் செயலாளர் மு.ஞானவேலன், செம்பனார்கோயில் வடக்கு ஒன்றியச் செயலாளர் பி.எம்.அன்பழகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கி பேசினார்.

கூட்டத்தில் மாநில மாணவர் அணி துணைச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற தொகுதி பார்வையாளர் மன்னை த.சோழராஜன் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர். கூட்டத்தில் வரும் 2026 சட்ட மன்ற தேர்தல் பணியை இன்றே தொடங்கிடுவது என்றும் பி.எல்.சி. யினர் அனைவரும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்காளர்களை நேரில் சந்தித்து தி.மு.க. ஆட்சியின் சாதனையை எடுத்துக் கூறியும், ஒவ்வொரு குடும்பத்தினரும் தி.மு.க. ஆட்சியில் பெற்ற பயன்களை எடுத்துக் கூறி வாக்குகளை சேகரித்திட வேண்டும் என்றும், இன்றே கழகத்தினர் தேர்தல் பணியை தொடங்கிட வேண்டும் என தீர்மாங் கள் நிறைவேற்றப் பட்டது.

கூட்டத்தில் மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிளைப்பாளர் கே.விக்னேஷ், செம்பனார்கோயில் தெற்கு ஒன்றிய நிர்வாகிகள் மாவட்ட பிரதிநிதிகள் ஈச்சங்குடி க.இளங்கோவன், கே.எஸ்.எஸ்.கருணாநிதி, கே.பி. ராஜா, ஒன்றியக் கழக துணைச் செயலாளர்கள் எஸ்.சிவக்குமார், கா. இளங்கோவன்,

செல்லம்மாள்பன்னீர் செல்வம், பொருளாளர் ஏ.ரெங்க ராஜ், தரங்கம்பாடி பேரூர் நிர்வாகிகள் அவைத்தலைவர் எஸ்.கந்தசாமி, மாவட்டப் பிரதி நிதிகள் ஏ.சடகோபன், பொன்ராஜேந்திரன், துணைச் செயலாளர்கள் த.மதியாழகன், எஸ்.பால்ராஜ், அம்பிகாபிரபு பொருளாளர் வி.கண்ணதாசன், ஒன்றிய பிரதிநிதிகள் ஏ.கே.சந்துரு, கே.ராஜா, எஸ்.முகமது இக்பால், ஜி.செந்தில்குமார் மற்றும் ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். முடிவில் தரங்கம்பாடி பேரூர் செயலாளர் எஸ்.கே.முத்து ராஜா நன்றி கூறினார்.

---



கழக மூத்த முன்னோடி மறைந்த மு.சுலைமான் அவர்களின் மூத்த மகனும்,கோவை மாநகர் மாவட்ட துணைச்செயலாளர் கோட்டை அப்பாஸ் அவர்களின் சகோதரர் அபு(எ) சையது அபுதாஹிர் மறைவையொட்டி, அவரது இல்லத்திற்கு, மாநகர் மாவட்ட செயலாளர் நா.கார்த்திக், வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி ஆகியோர் நேரில் சென்று மாநகர் மாவட்ட துனைச்செயலாளர் கோட்டை அப்பாஸ், அவரது தம்பி மு.சு.சித்திக் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொண்டனர்.பகுதிக்கழக செயலாளர்கள் விஜ பதுருதீன்,கார்த்திக்செல்வராஜ்,ப.பசுபதி, பொதுக்குழு உறுப்பினர் ச.கார்த்திகேயன்,வட்டக் கழகச் செயலாளர்கள் ஏ.அப்பாஸ், டவுன் பா. ஆனந்த், மாவட்டப் பிரதிநிதி எல்.என்.ரஹீம் , அணிகளின் அமைப்பாளர்கள் தளபதி தியாகு இரா. தனபால் துணை அமைப்பாளர்கள் புவனேஷ்,சாஜஹான் மற்றும் கழக நிர்வாகிகள் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொண்டனர்.




மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஒன்றியம் மற்றும் சீர்காழி கிழக்கு ஒன்றிய பாக முகவர்கள் (பி.எல்.ஏ.2) மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (பி.எல்.சி) கலந்தாய்வு கூட்டம் செம்பனார்கோயிலில் நடைபெற்றது. கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., சிறப்புரையாற்றினார். உடன் பூம்புகார் சட்ட மன்ற தொகுதி பார்வையாளர் மன்னை த.சோழராஜன், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் ஏ.சி.என்.விஜயபாலன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜி.என்.ரவி, முத்து.மகேந்திரன், மாவட்டக் கழக துணைச் செயலாளர் மு.ஞானவேலன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பி.எம்.அன்பழகன், பஞ்சு.குமார், எம்.அப்துல்மாலிக், அமிர்த.விஜயக்குமார் மற்றும் பலர் உள்ளனர்.